* வினா 68—திரு. வ. துலுக்காணம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள சேப்பாக்கம் கிராமத்தில் நடைபெறும் அரிசன நல்த்துறை உயர்நிலைப்பள்ளியை ஹையர் செகண்டரி பள்ளியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) இப்பள்ளி சிறிய பள்ளியாதலாலும், போதிய இட வசதி இல்லாததாலும், 9, 10, 11 வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாலும், இப்பள்ளி ஹையர் செகண்டரிப் பள்ளியாக உயர்த்தும் தகுதி பெறவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, முக்கிய மான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். அடுத்த கேள்வி என்று சொன்னதற்குப் பிறகு, எழுந்து நின்று கேட்கும் பழக்கம் கூடாது. தயவுசெய்து உட்காருங்கள்.

Selection to part-time Bachelor of Engineering Course

* Q. 69 Thiru R. E. Chandran Jayapal—Will the Hon. the Minister for Education be pleased to state whether the period o- practical experience will be fixed at 10 years for selection from workf ing class Engineering Diploma folders for part-time Bachelor of Engineering course in Tamil Nadu Engineering Colleges?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : சென்னை மற்றும் மதுரை பல்கலைக் கழகங்களைச் சார்ந்த பொறியியல் கல்லூரிகளில் பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்பு வகுப்பில் சேர, அப் பல்கலைக் கழகங்களின் விதிகளின்படி, பணியிலிருக்கும் பொறி யாளர் டிப்ளோமாதாரர்கள் சம்பந்தப்பட்ட பொறியியல் துறையில் குறைந்தது 3 ஆண்டுகள் முன்னனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். இதை 10 ஆண்டுகளாக உயர்த்த அரசுக்கு உத்தேசம் இல்லை.

ஊராட்சிகளில் மக்கள் குழுக்கள்

* வினா 70—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட் சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

ஊராட்சி மன்றங்களுக்குப் பதில் மக்கள் குழு அமைக்க அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளதா?